தமிழகத்தில் 1981–82-ல் விதவை மறுமணம் செய்துக்கொண்டவர்கள் எண்ணிக்கை.

404 (*வினா எண். 18081)—**திரு. இரெ. இராசமாணிக்கம் :** மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் 1981–82-ல் விதவை மறுமணம் செய்துகொண்டவர்கள் எத்தனை பேர்? மாவட்ட வாரியாக

(ஆ) அவர்களுக்கு அரசு வழங்கிய உதவித்தொகை எவ்வளவு?

(இ) அவர்களுள் கலப்புமணம் செய்து கொண்டவர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) தமிழகத்தில் 1981–82-ல் விதவைத் திருமணம் செய்துகொண்ட அத்துணைத் தம்பதியரின் எண்ணிக்கைக் குறித்து அரசிடம் தகவல் இல்லை. ஆனால் விதவைத் திருமணம் செய்து கொண்டத் தம்பதிகளில் உதவித் தொகைவேண்டி விண்ணப்பித்து 1981–82-ல் தேர்ந்து எடுக்கப்பட்ட 100 தம்பதியருக்கு அரசின் உதவித் தொகை வழங்கப்பட்டது. மாவட்ட வாரியான விவரம் கீழ் வருமாறு :—

சென்னை	7
செங்கல்பட்டு	7
வடஆற்காடு	7
தென் ஆற்காடு	7
தர்மபுரி	7
சேலம்	7
பெரியார்	4
கோயம்புத்தூர்	7
நீலகிரி	2
திருச்சி	7
மதுரை	7
இராமநாதபுரம்	7
தஞ்சாவூர்	7
புதுக்கோட்டை	4
திருநெல்வேலி	7
கன்னியாகுமரி	6
மொத்தம்	100

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1984 மார்ச் 22]

(ஆ) ஒவ்வொரு தம்பதியருக்கும் ரூ. 5,000 மதிப்புள்ள 7 ஆண்டு தேசிய சேமிப்புப் பத்திரங்கள் வழங்கப்பட்டன.

(இ) விதவை மறுமணத்தை ஊக்குவிக்கும் பொருட்டு வகுப்பு மற்றும் மதம் என்ற வேறுபாடின்றி இவ்வுதவி வழங்கப் படுகிறது. அதனால் விதவை மறுமணம் செய்து கொண்ட வர்களில் கலப்பு மணம் பற்றிய விவரம் அவர்களிடம் கேட்கப்படுவதில்லை.

திரு. சு. பாலன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுமணம் செய்து கொள்ளும் விதவை களுக்கு 5,000 ரூபாய் 7 ஆண்டுகால தேசிய சேமிப்பு பத்திரங்கள் என்ற வகையில் அரசு கொடுத்து இருப்பதாகச் சொன்னார்கள். அப்படி விதவைகள் மறுதிருமணம் செய்து கொண்டவர்கள் மனு செய்யும் நேரத்தில், அவர்களுக்கு உடனடியாக அந்தப் பணத்தைக் கொடுக்க அரசு முன் வருமா ? 7 ஆண்டுகால பத்திரங்களாகக் கொடுப்பதால், அவர்களுக்கு இடையில் கஷ்டம் ஏற்படுகிறபோது, அவ்வப்போது அந்தப் பணத்தில் இருந்து கொஞ்சம் கொஞ்சம் எடுத்துக்கொள்ள அரசு வழிவகை செய்யுமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, விதவைகள் மறுமணம் செய்து கொள்கிற நேரத்தில் அவர்களுக்கு 5,000 ரூபாய் மதிப்புள்ள தேசிய சேமிப்புப் பத்திரம் கொடுக்கப்பட்டு அது வங்கிகளில் போடப்பட்டு, 7 ஆண்டுகாலம் கழிந்த பின்னர் அது 10,000 ரூபாய் என்று வருகிற நேரத்தில், அப்போது அது அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. மறுமணம் செய்து கொள்கிற சமயத்திலேயே கொடுத்து விட்டால் அவர்களி டையே ஒரு அன்பு ஏற்படாது என்ற காரணத்தால், அவர் களிடையே ஒரு அன்பு ஏற்படுத்தவேண்டும் என்ற அளவில், அவர்களுக்கு ஒரு குழந்தை பிறந்து விட்டால் அவர்கள் பின்னர் பிரிய முடியாத அளவிற்கு இருந்து விடுவார்கள் என்பதால், இந்த 7 ஆண்டுகால பத்திரங்கள் கொடுக்கப் பட்டு, அவர்களுக்கு 10,000 ரூபாய் என்று வழங்கப்படு கிறது.

திரு. க. பாரமலை : தலைவர் அவர்களே, விதவைகள் மறுமணம் என்பது ஒரு பெரிய சமூக சீர்திருத்தமாகும். இப்படி விதவைகளை மறுமணம் செய்து கொண்டவர்கள் பல சமூகத் தில் இருக்கின்றனர். அவர்கள் இதை ஊக்குவிப்பதற்கு எதி ராக இருக்கிறார்கள். சில குறிப்பில் இருப்பவர்கள் விதவை களை மறுமணம் செய்து கொள்கிற நேரத்தில் வெளியே தெரியாமல் செய்கிறார்கள். ஆகவே, எப்படிப்பட்டவர்கள் எல்லாம் மறுமணம் செய்து கொண்டார்கள் என்பது வெளி உலகத்திற்கு அறிவிக்கப்பட்டால், அது நல்ல வகையில் இதை ஊக்குவிக்க வசதியாகவும், உதவியாகவும் இருக்கும். ஆகவே,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

எந்த வருஷத்தில் இருந்து திருமணம் செய்து கொண்டவர்களுக்கு இந்த ஊக்கத்தொகை கொடுக்கப்படும் என்கிற நிர்ணயிப்பு இல்லாமல், ஒரு 10 ஆண்டுகளுக்கு முன்பாக அப்படி மறுமணம் செய்து கொண்டு இருந்தால், அவர்களுக்கும் இந்த ஊக்கத் தொகை கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, 10 வருஷத்திற்கு முன்னாலே மறுமணம் செய்து கொண்டவர்களை இப்போது அந்தப் பட்டியலில் சேர்த்துக்கொள்ள முடியாது. எந்தெந்த வருஷம் பணம் ஒதுக்கப்படுகிறதோ அந்தந்த வருஷத்தில்தான் அவர்களை அந்தப் பட்டியலில் சேர்த்து உதவித் தொகை வழங்கப்படும்.

விதவைகள் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 31—3—1983 முடிய பயன் பெற்றவர்கள் எண்ணிக்கை.

405—(*வினா எண். 19105)—திரு. மு. அப்பாதுரை மற்றும் திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமூகநலத் துறை மூலம் விதவைகள் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 31—3—1983 முடிய பயன்பெற்றவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்கள் பெற்றுள்ள பயன்கள் யாவை?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) 10864 பேர்.

(ஆ) சமூக நலத்துறை மூலம் விதவைகள் மற்றும் ஆதரவற்ற தாய்மார்கள் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் சிறுதொழில் செய்து பிழைக்க அதாவது பூ, பழம், காய்கறிகள், மீன், அரிசி, புடவை, எவர்சில்வர் பாத்திரங்கள், பிளாஸ்டிக் சாமான்கள் வியாபாரம் செய்வதற்கு வங்கிகளில் கடனுதவி வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. இத்திட்டம் சென்னை, மதுரை, கோவை மற்றும் தஞ்சை மாவட்டங்களில் இயங்கி வரும் வழிகாட்டி நிலையங்கள் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

2. பல்வேறு தேசியமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் விதவைகள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்களுக்கு கடனுதவி பெற்றுத் தந்து சுய வேலைவாய்ப்புகளுக்கு வசதி செய்து தரப்படுகிறது. குறைந்த வட்டி விகிதத்தில் 200 முதல் 1,000 ரூபாய் வங்கிக் கடன் தொகை பெற்று, சுயமாகத் தொழில் செய்து அதன் மூலம் தங்களது வாழ்க்கையினை நடத்த வழி